# பெரியாழ்வார் திருமொழி 1-8
## பொன்னியல்
(அணைத்துக் கொள்ள அழைத்தல்: அச்சோப்பருவம்)

97 * பொன்னியல் கிண்கிணி * சுட்டி புறம் கட்டி *
தன்னியலோசை * சலன்சலனென்றிட **
மின்னியல் மேகம் * விரைந்தெதிர் வந்தாற் போல் *
என்னிடைக் கோட்டரா அச்சோவச்சோ * எம்பெருமான் வாரா
அச்சோவச்சோ (1)

98 செங்கமலப் பூவில் * தேன் உண்ணும் வண்டே போல் *
பங்கிகள் வந்து * உன் பவளவாய் மொய்ப்ப **
சங்குவில் வாள்தண்டு * சக்கரம் ஏந்திய *
அங்கைகளாலே வந்து அச்சோவச்சோ * ஆரத்தழுவா வந்து
அச்சோவச்சோ (2)

99 பஞ்சவர் தூதனாய்ப் * பாரதம் கைசெய்து *
நஞ்சுமிழ் நாகம் கிடந்த * நற்பொய்கை புக்கு **
அஞ்சப் பணத்தின் மேல் * பாய்ந்திட்டு அருள் செய்த *
அஞ்சன வண்ணனே அச்சோவச்சோ * ஆயர் பெருமானே
அச்சோவச்சோ (3)

100 நாறிய சாந்தம் * நமக்கிறை நல்கென்ன *
தேறி அவளும் * திருவுடம்பில் பூச **
ஊறிய கூனினை * உள்ளே ஒடுங்க * அன்று
ஏற உருவினாய் அச்சோவச்சோ * எம்பெருமான் வாரா
அச்சோவச்சோ (4)

101 கழல் மன்னர் சூழக் * கதிர் போல் விளங்கி *
எழலுற்று மீண்டே * இருந்து உன்னை நோக்கும் **
சுழலைப் பெரிதுடைத் * துச்சோதனனை *
அழல விழித்தானே அச்சோவச்சோ * ஆழியங்கையனே
அச்சோவச்சோ (5)

102 போரொக்கப் பண்ணி * இப்பூமிப் பொறை தீர்ப்பான் *
தேரொக்க ஊர்ந்தாய் * செழுந்தார் விசயற்காய் **
காரொக்கும் மேனிக் * கரும் பெருங்கண்ணனே *
ஆரத்தழுவா வந்து அச்சோவச்சோ * ஆயர்கள் போரேறே
அச்சோவச்சோ (6)

103 மிக்க பெரும் புகழ் * மாவலி வேள்வியில் *
தக்கதிதன்றென்று * தானம் விலக்கிய **
சுக்கிரன் கண்ணைத் * துரும்பால் கிளறிய *
சக்கரக் கையனே அச்சோவச்சோ * சங்கமிடத்தானே
அச்சோவச்சோ (7)

104 என்னிது மாயம் * என்னப்பன் அறிந்திலன் *
முன்னைய வண்ணமே கொண்டு * அளவாயென்ன **
மன்னு நமுசியை * வானில் சுழற்றிய *
மின்னு முடியனே அச்சோவச்சோ * வேங்கடவாணனே
அச்சோவச்சோ (8)

105 கண்ட கடலும் * மலையும் உலகேழும் *
முண்டத்துக்காற்றா * முகில் வண்ணாவோ என்று **
இண்டைச் சடைமுடி * ஈசன் இரக்கொள்ள *
மண்டை நிறைத்தானே அச்சோவச்சோ * மார்வில் மறுவனே
அச்சோவச்சோ (9)

106 துன்னிய பேரிருள் * சூழ்ந்து உலகை மூட *
மன்னிய நான்மறை * முற்றும் மறைந்திட **
பின்னிவ்வுலகினில் * பேரிருள் நீங்க * அன்று
அன்னமதானானே அச்சோவச்சோ * அருமறை தந்தானே
அச்சோவச்சோ (10)

107 * நச்சுவார் முன்னிற்கும் * நாராயணன் தன்னை *
அச்சோ வருகவென்று * ஆய்ச்சி உரைத்தன **
மச்சணி மாடப் * புதுவைகோன் பட்டன் சொல் *
நிச்சலும் பாடுவார் * நீள்விசும்பாள்வரே (11)